## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறுவதுபோல் “சனாதனத்தை” அழித்தொழிப்பதுதான் சரியான வழி!

# சனாதனம் ஒரு வாழ்வியல் என்பது உண்மையல்ல; வெற்றுக் கூச்சல்!

### ‘சன் செய்திகள்’ தொலைக்காட்சி ‘கேள்விக்களம்’ விவாதத்தில் பேராசிரியர் வீ.அரசு ஆணித்தரம்!

**சென்னை, செப். 7 - ‘சன் செய்திகள்’ தொலைக்காட்சியில், 4.9.2023 - திங்கள்கிழமை அன்று இரவு ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் - சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வீ.அரசு பங்கேற்று ‘சனாதனம்’ குறித்து பல்வேறு கருத்துக் களை விரிவாக எடுத்துரைத்தார்.**

அந்த விவாதம் வருமாறு: -

**நெறியாளர் மு.குணசேகரன் :** சனாதனம் என்ற ஒன்றிற்கு பலரும் பல விளக்கத்தைத் தருகிறார்கள். சனாதனத்தை எதிர்ப்பதைவிட, அதை ஒழிக்க வேண்டும் என்று அவர் பேசிய பேச்சை நீங்கள் ஏற்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதற்கு எழும் எதிர்ப்பை எப்படி புரிந்து கொள்வது? இரண்டாவது முக்கியமான ஒன்று, சனாதன தர்மம் ஒரு வாழ்க்கை முறை. இந்து மதம். இந்து வாழ்க்கை முறையே சனாதன தர்மம்தான். நீங்கள் சனாதனத்தை எதிர்க்கிறீர்கள் என்றால் இந்து மதத்தை எதிர்க்கிறீர்கள். இந்து வாழ்வியலை எதிர்க்கிறீர்கள், இந்து மதத் தத்துவங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்கள் என்று சொல்கிறார்களே, அந்தத் தத்துவங்கள் சிறந்தவை என்றும் சொல்லும் வாதத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?


**பேராசிரியர் வீ.அரசு :** உங்களது இரண்டாவது கேள்விக்கு நான் முதலில் பதில் சொல்ல விரும்புகிறேன். என்னவென்றால், சனாதனம் என்பது ஒரு வாழ்வியல் என்று சொல்கிற அந்த சொல் அப்பட்டமான எந்த அடிப்படையும் இல்லாத ஒரு பொய்யான விஷயம் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது சனாதன தர்மம் பற்றி எழுதி இருக்கும் அந்தப் புத்தகங்கள் எல்லாம் வாசிக்கிறபோது இவர்கள் சொல்வது போன்று ஒரு சொல், ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்ளலாம். அதிலும் வாழ்வியல் என்று சொல்கிறார்கள், மிகவும் பழைய காலத்திலிருந்து வந்தது என்று சொல்கிறார்கள். அப்போது அந்த மாதிரியான பின்புலத்தில் ஒரு வாதத்திற்கு ஒப்புக்கொண்டால்கூட, அவர்கள் சொல்கிறார்கள், இந்த சனாதனத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், படிக்க வேண்டும் என்றால், அதற்கு எது மூலம். எது மூல தத்துவ நூல் என்று அவர்கள் சொல்வது எது என்று சொன்னால் மனுஸ்மிருதியைத்தான் சொல்கிறார்கள். அப்போது மனுஸ்மிருதியில் என்ன சொல்லி இருக்கிறது என்ற விஷயத்தை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டோம் என்கிறார்கள்.

மனுஸ்மிருதியில் பேசுகிற வர்ணாசிரமத்தை ஏற்றுக் கொள்கிற ஒரு நூல். அதாவது நால்வகை வர்ணாசிரமத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தச் சமூகம் இயங்க வேண்டும். அதில் எந்தவித மாற்றத்தையும் செய்யக்கூடாது என்று சொல்கிற நம்முடைய சங்கராச்சாரியாரின் கருத்துக்களை முன்மொழிகிற ஒரு மரபைத்தான் மனுஸ்மிருதியும் சொல்கிறது. அந்த மனுஸ்மிருதி நூல்தான் சனாதனத்தின் மூலத் தத்துவம் என்று அந்த சனாதனம் பற்றி எழுதியிருக்கும் எல்லா அறிஞர்களும் எழுதுகிறார்கள். அதன் பின்பு அந்த சனாதனத்தின் வேறு வேறு வடிவங்கள் எதை எதை எல்லாம் நீங்கள் பின்பற்ற வேண்டும், படிக்க வேண்டும் என்று சொல்கிறபோது ராமாயணம், மகாபாரதம் இந்தக் காவியங்கள் எல்லாம் சனாதனத்தைப் பேசுவது, அந்த மரபில் வருவது என்று அவர்கள் சொல்கிறார்கள்.

**என்னுடைய கேள்வி என்ன என்றால், இந்த மனுஸ்மிருதியை ஒரு மூலநூல் என்று சொல்கிற தத்துவம், அது எப்படி சரியாக இருக்க முடியும்? ஏனென்றால் மனுஸ்மிருதியில் பெண்களைப் பற்றி சொல்கிற சில விஷயங்களை நான் மேலோட்டமாக சொல்லாமல் அப்படியே வாசித்தே காண்பிக்கிறேன். அதாவது ‘தாய், தங்கை, மகள் ஆகியோருடன் தனியாய் ஒன்றாக உட்கார கூடாது. இந்திரியங்களின் கூட்டமானது மிகவும் பலம் உள்ளது. அது தெரிந்தவனையும் மயக்கிவிடும்.‘ இப்படி சொல்கிறது பெண்களை பற்றி மனுஸ்மிருதி. அது சொல்கிறது, ‘தந்தை, கணவன், மகன்கள் இவர்கள் இல்லாமல் தனியாக ஒரு பெண் வாழவே கூடாது. அது தர்மத்திற்கு எதிரானது‘ என்று அது சொல்கிறது. ‘இழி நடத்தை கொண்டவனாக கணவன் இருந்தாலும், மற்ற பெண்களோடு உறவு வைத்திருப்பவனாக இருந்தாலும், நற்குணம் இல்லாதவனாக இருந்தாலும், கற்புடைய பெண் அவனை தெய்வத்தை போல் பூசிக்க வேண்டும்‘ என்று மனுஸ்மிருதி சொல்கிறது.**

இவ்வாறு பெண்களைப் பற்றி எவ்வளவோ சொல்கிறது. ‘மனைவி இறந்து போனால் கணவன் இன்னொரு திருமணம் செய்து கொண்டு வாழலாம். ஆனால் பெண் என்பவள் விதவையாக இருந்தேதான் சாக வேண்டும்.‘ இதையெல்லாம் மனுஸ்மிருதியில் மூலமாக எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள். அதேபோல அந்த மனுஸ்மிருதியில், சூத்திரனை பற்றிய விஷயங்களை நிறைய பேசி இருக்கிறது. ‘அந்த சூத்திரன் என்பவன் யார் என்று



பேராசிரியர்
வீ.அரசு



நெறியாளர்
மு.குணசேகரன்

சொன்னால், அவன் மேல் ஜாதியை இருக்கும் பிராமணர்களுக்கு தொண்டு செய்பவன், அதற்கெனவே பிறந்தவன், அதைவிட்டு அவனுக்கு வேறு எந்த தொழிலும் கிடையாது.

அதேபோல பன்றி முகர்ந்தாலும், கோழிச் சிறகின் காற்றினாலும், நாய் பார்வையினாலும், சூத்திரன் தொடுவதாலும் பதார்த்தம் அசுத்தமாகிவிடுகிறது.’ இவையெல்லாம் கொஞ்சம் கவனியுங்கள். ‘சூத்திரன் ஆளும் நாட்டில் அறம் அறியாதவர்கள் தீயோர் வசிக்கும் ஊரிலும் வசிக்கக் கூடாது.’ இவர்களுடைய கணக்குப்படி பார்த்தால் சூத்திரன் ஆளும் தமிழ்நாட்டில் அவர்கள் இருக்கவே கூடாது, அவர்கள் எல்லாம் வண்டி கட்ட வேண்டிய ஆட்கள்தான்.

இவ்வாறு மிக மோசமான ஒரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அதை வாழ்வியல் என்று பேசுகிற, அதை இந்து மதம் என்று சொல்கிற, அதை இந்துத்துவா என்று சொல்கிற, அதை ஆர்.எஸ்.எஸ். என்று சொல்கிற அந்தத் தத்துவத்தை, அந்தக் கோட்பாட்டை தமிழ்ச் சமூகம் ரொம்ப காலமாக எதிர்த்து வந்திருக்கிறது.

இன்றைக்கு மட்டுமல்ல, அதை 19ஆம் நூற்றாண்டிலேயே வள்ளலார் கடுமையாக எதிர்த்தார். வள்ளலாரைவிட சனாதனத்தை எதிர்த்த பெரிய மகான் யாரும் கிடையாது. அதேபோல அந்த நூற்றாண்டில் உருவான நிறைய அமைப்புகள் எல்லாம் இந்த சனாதனத்திற்கு எதிராகவே உருவாகின.

இதனுடைய தொடர்ச்சியாகத்தான் அயோத்திதாசர் போன்றவர்கள் வந்தார்கள், இதனுடைய தொடர்ச்சியாகத்தான் பெரியார் வந்தார். இந்த பெரியாரின் மூலமாகத்தான் இந்த பழம் தமிழ்ச் சமூகத்தின் வரலாறு மீட்கப்பட்டது. தமிழ்ச் சமூகத்திற்கு தனியான வரலாறு உண்டு; அதை மறந்துவிடக்கூடாது. தமிழ்ச் சமூகம் என்பது மூவாயிரம் ஆண்டுகளாக தனக்கென தனி தன்மைகளைக் கொண்ட, உங்களைப்போல புராண, எந்தவிதமான அடிப்படையும் இல்லாத தன்மைகளை நம்புகிற, வணங்குகிற ஒரு முட்டாள் கூட்டம் அல்ல தமிழ்க் கூட்டம்.

தமிழ்க் கூட்டம் தொடக்க காலத்தில் இருந்து ஒரு தெளிவான தத்துவ மரபோடு வளர்ந்து வளர்ச்சி அடைந்த கூட்டம். அதன் தன்மைகளை சங்க இலக்கியத்தில், தொல்காப்பியத்தில், திருவள்ளுவரிடம், திருமூலரிடம், தாயுமானவரிடம், வள்ளலாரிடம் பெரிய தொடர்ச்சியைக் காணலாம். இவர்கள் எல்லோருமே சனாதனத்தை மறுத்தவர்கள். சாதியை மறுத்தவர்கள். மூடநம்பிக்கைகளை மறுத்தவர்கள். கண்மூடிப் பழக்கத்தை அழித்தவர்கள்.

**இந்த மண்ணில் இருந்துதான் இன்றைக்கு திராவிட இயக்கம் சார்ந்தவர்கள் பேசுகிறார்கள். உதயநிதி பேசுகிறார். உதயநிதி பேசுவதில் என்ன தவறு? உதயநிதி என்பவர் வள்ளலாரின் பாரம்பரியம், உதயநிதி என்பவர் பெரியாரின் பாரம்பரியம். உதயநிதி இன்றைக்கு இருக்கும், நீங்கள் சொல்வது போன்று ஒரு அரசியல் கட்சிக்காரராக இருந்தால், இவ்வாறு இந்து மதத்தை, இந்து மதம் சார்ந்த விஷயங்களை எல்லாம் பேசினால் அவருக்கு ஓட்டு போய்விடும் என்று கவலைப்படுகிறார்கள். அது அல்ல முக்கியம்.**

இந்த வடநாட்டில் இருக்கும் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். இவ்வாறு இருப்பவர்களுக்கு எந்த விதமான சித்தாந்தத் தெளிவும் கிடையாது. அவர்கள் மக்களைக் குழப்புகிறார்கள். அவர்களுக்கு புராணங்கள்தான் தெரியும். அவர்களுக்கு மூட நம்பிக்கைகள்தான் தெரியும். அவர்களுக்குத் தாக்கபூர்வமான வளர்ச்சியோ வரலாறே எதுவும் இல்லாத ஒரு சமூகம். நான் இப்படிச் சொல்வேன், ஒரு தமிழ் மொழி என்று எடுத்துச் சொன்னால் அதற்கு என்று ஒரு மக்கள் கூட்டம் உண்டு. அந்த மொழிக்கு என்று எழுத்து மரபு உண்டு. அந்த மொழிக்கு என்று 3000 ஆண்டுகால வரலாறு உண்டு. இந்த வரலாறில் இருந்து உருவான ஒரு தத்துவம் உண்டு. அந்தத் தத்துவம்தான் இந்த அவைத் தீக தத்துவம். அது பௌத்தத்தில் இருந்து வந்தது. அதை வள்ளலார் பேசினார். அதை பெரியார் பேசினார். அந்தப் பெரியாரைப் பின்பற்றும்; இன்றைக்கு இருக்கும் இந்த கலைஞர் மரபில் வரும் ஸ்டாலினும், உதயநிதியும் பேசுவதுதான் மரபு. அதை அவர்கள் பேசுகிறார்கள். அதை நாம் மிக மன மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டும்.

அதற்கு மாறாக: ‘அவர் பேசுவது தவறு. அவர் என்ன தொனியில் பேசுகிறார் என்று சொன்னால், அவர் மிகவும் சின்ன பையன், அவர் இப்போதுதான் அரசியலுக்கு வந்திருக்கிறார், அவர் இப்படியான விஷயங்களை பேசக்கூடாது, இப்படிப் பேசினால் அவருக்கு ஓட்டு கிடைக்காமல் போய்விடும்’, இப்படி எல்லாம் அவர்மேல் பரிதாபப்படுகிற தொனியிலும், இந்த வாழ்வியல் இந்துத்துவம், வாழ்வியல் சனாதனம் என்கிற பொய்யை இந்த தமிழ்ச் சமூகத்தில் பரப்ப முடியாது. தமிழ்ச் சமூகம் அதை ஏற்காது. வேண்டும் என்றால் ஒரு சிறிய கூட்டம் அதைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். அது இந்தச் சமூகத்திற்கே எதிரானது, தேவையில்லாதது. அந்த தேவையில்லாத ஒரு விஷயத்தை இங்கு கொண்டுவந்து எங்கள் மண்டையில் ஏற்றி, அதை நீங்கள் பேச வேண்டும், இங்கு உள்ளவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும்.

அண்ணா, ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்‘ என்று சொன்னார் என்றால் அதாவது இங்கிருக்கும் மக்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்று விரும்பினார். அதில் அந்த ஒற்றுமை சார்ந்து இங்கு பெரும் பகுதியாக நம்பிக்கை உடையவர்களுக்கு ஒரு ஆறுதல் தரும் சொல். அதனால் அவரை பெரிய மதவாதி என்றோ, சனாதனவாதி என்றோ, அதை பேசியவர் என்றோ நீங்கள் அறிஞர் அண்ணாவைச் சொல்ல முடியாது. ஆகையினால் நண்பர்களே தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். பெரியார் என்ற ஒரு மனிதர் இந்து சமூகத்தில் பேசிய கருத்துகள் என்பவை, இங்கு ஒரு நண்பர் சொன்னார், இந்த தமிழகத்தில் சாதிப் பெயர் கிடையாது, சாதிப் பெயர் எழுதவில்லை, மத நம்பிக்கைகள் என்பவை இங்கு பாரம்பரியமாக இருந்து வரும் ஒரு வெறும் சடங்குதான். அது ஒரு வாழ்முறையே இல்லை.

**நம்முடைய மக்கள் ஒரு கோயிலுக்குப் போகிறார்கள் என்று சொன்னால் காலம் காலமாக அவர்களுக்கு ஒரு சடங்காக, விழாவாக; இதற்கு மாறாக பெரிய பெரிய கோவில்கள் நம்மூரில் இருப்பதால் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான். அவர்கள் இந்துக்கள் அல்ல, நீங்கள் இந்துக்கள் இந்துக்கள் என்று அவர்களுக்கு சென்சஸ் கணக்கு போட்டு, சென்சசில் எழுதி வைத்திருப்பதெல்லாம் உண்மையாக இருக்க முடியாது. மக்கள் கணக்கில் குறிக்கிற குறிப்புகள் எல்லாம் எதார்த்தம் இல்லை. ஆகையினால் நீங்கள் தமிழ்நாட்டை தனியாகப் புரிந்து கொள்ளுங்கள். தமிழ்நாட்டின் தன்மை வேறு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.**

**நெறியாளர் மு.குணசேகரன்:** தமிழ்நாட்டில் இதற்கு எதிர்ப்பு இல்லை. உதயநிதி பேசியதற்கு வலிமையான எதிர்ப்பு இல்லை. பரவலான வரவேற்பை தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் பேசுவதை பார்க்கிறோம். இந்த மேடையில் உதயநிதியின் அரசியலை எதிர்க்கும் ஆவடி குமார்கூட அந்தக் கருத்தியலை முரண்பட்டுப் பேசவில்லை. நமக்கு முன்பு இரண்டு, மூன்று விஷயங்கள் வருகிறது. நீங்கள் ஒரு வரலாற்றுப் பின்புலத்தைச் சொல்கிறீர்கள். வட இந்தியாவில் இருந்து இதற்கு வரும் எதிர்ப்பின் சாராம்சத்தை, அவருடைய தலையை வெட்டிக் கொண்டு வருபவர்களுக்கு 10 கோடி ரூபாய் பணம் என்ற அறிவிப்பிலிருந்து வரும் பல எதிர்ப்பின் ஒரே சாராம்சம் என்று எடுத்துக் கொண்டால்,

இந்தியாவின் பண்பாடே சனாதனம். சனாதனமும் இந்து மதமும் ஒன்று. சனாதன தர்மமும் இந்து மதமும் ஒன்று. இந்தியாவின் மரபு, பாரம்பரியம், பண்பாடு எல்லாமே சனாதன பண்பாடுதான். இந்தப் பாரம்பரியத்தை கொச்சைப்படுத்தும் வகையில், அதைப் பின்பற்றும் மக்களை இழிவுபடுத்தும் வகையில் உதயநிதி பேசலாமா? தமிழ்நாடு ஒரு ஆன்மிக பூமி. எவ்வளவோ பாரம்பரியமான கோயில்கள் இருக்கும் பூமி. இந்த ஊரில் இருந்து இந்தக் கருத்தைப் பேசலாமா என்று சொல்கிறார்கள். இதை எப்படிப் புரிந்து கொள்வது? சனாதனத்தை ஆதரித்ததனால் தமிழ்நாடு ஒரு பலன் அடைந்ததா? மனித குலத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெற்றார்களா அல்லது சனாதன எதிர்ப்பின் வழியாக அவர்களுக்கு ஏற்றம் என்பது கிடைத்ததா?

**பேராசிரியர் வீ.அரசு:** நீங்கள் சொன்னது போன்று, அவர்கள் இந்தியா முழுவதும் சனாதன தர்மம் தழைக்கிறது. இந்தியா என்றாலே சனாதனம்தான். சனாதனம் இல்லாவிட்டால் இந்தியா பண்பாடு, வரலாறு இதெல்லாம் இல்லை. இப்படிச் சொல்வதெல்லாம் அடிப்படை இல்லாதவை. அது உண்மை அல்ல. அது ஒரு வெற்றுக்கூச்சல்.

அதாவது ஒவ்வொரு மாநிலத்தில் இருப்பவர்களுக்கென்று ஒவ்வொரு வாழ்முறை இருக்கிறது. கேரளாவில் வாழ்கிற மனிதர்களின் வாழ்முறை வேறு. குஜராத்தில் இருப்பவர்கள் வாழ்முறை வேறு. வடகிழக்கு மாநிலங்களில் இருக்கும் மக்களின் வாழ்முறை வேறு. இப்படி பல்வேறு வேறுபட்ட பண்பாடு, வரலாறு இவற்றையெல்லாம் கொண்டதுதான் இந்தியா.

அப்படி இல்லாமல் வெறுமனே ஒரு சனாதன மரபை மட்டும் பின்பற்றி இருக்கும் பூமி இந்திய பூமி அல்ல. அது இவர்கள் ஒரே நாடு ஒரே மொழி ஒரே பண்பாடு என்று சொல்கிற ஒரு மிக மோசமான பாசிசப் பண்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குத்தான் னிஇந்த சனாதனத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்த சனாதனம் என்று சொன்னால் என்ன? சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு காலத்தில் இந்த இந்தியாவில் பௌத்தத்திற்கும், அதைப்போல பௌத்தம் அல்லாதவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடு. அதை வைதிகம் அவைதிகம் என்று சொல்வார்கள். இந்த அவைதிக மரபுகளை எதிர்கொள்வதற்காக உருவானது பிராமணிய மதம். இந்த பிராமணிய மதம் சங்கராச்சாரி போன்றவர்களால் ஒன்று கூட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டது.

18ஆம் நூற்றாண்டில் வெள்ளைக்காரர்கள் வந்த காலத்தில் சங்கராச்சாரியார் சொன்னார், “நீங்கள் பல பல பிரிவுகளாக இருக்காதீர்கள். அது நமக்கு சக்தி இல்லை. நீ வைணவனாக, என்னவாக வேண்டுமானாலும் இரு. ஆனால் உனக்கு ஒரு பெயர் வேண்டும். அதை வெள்ளைக்காரன் நன்றாகச் சொல்லியிருக்கிறான். இந்து மதம், இந்துக்கள் என்று சொல்லியிருக்கிறான். ஆகையால் அந்தப் பெயரை நாம் வைத்துக் கொள்ளலாம்” என்று சொல்லி 18ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த கதை இது.

அந்த 18ஆம் நூற்றாண்டில் இருந்து வந்த பிறகு, குறிப்பாக 1925இல் இந்து சுயராஷ்டிரம், அதேபோல திலகர், அதைச் சார்ந்து வந்தவர்கள், இப்போது உருவாகி இருக்கும் ஆர்.எஸ்.எஸ். இந்த பி.ஜே.பி., இவை எல்லாம் இந்த இந்தியாவின் பன்மத்துவத்தை அழித்து, பன்மத்துவ வாழ்முறையை இல்லாமல் ஆக்கி, ஒரு வகையான மத வாழ்முறையை, இந்துராஷ்டிரத்தை, பாரத தேசத்தை இங்கிருக்கும் சாதாரண இசுலாமிய மக்களை, கிறித்துவர்களை இப்படி பல்வகைப்பட்ட வடகிழக்கு மாநிலத்தில் வாழும் தொல் பழங்குடி மக்களை, காஷ்மீரில் வாழும் மக்களை, இவர்கள் எல்லோரையும் அழித்துவிட வேண்டும். அவற்றையெல்லாம் அழித்து, அவர்களை இந்து ராஷ்டிரமாக மாற்ற வேண்டும். எல்லோரும் இந்துக்கள் என்று சொல்ல வேண்டும் என்ற ஒரு மனநிலையில் பேசுவதுதான் இந்த சனாதனம்.

ஆகையினால் இந்த சனாதனம் என்பதற்கான ஒரு மிகப்பெரிய வரையறையோ, வரலாறோ எதுவுமே கிடையாது. இவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள், வாழ்வியல், வாழ்வியல் என்று சொல்வார்கள். என்ன வாழ்வியல்? நான் கேட்கிறேன், நீங்கள் வாழ்வியல் என்று சொல்கிறீர்கள். அந்த வாழ்வியலுக்கு மூல நூலாகச் சொல்வது மனுஸ்மிருதி, அந்த மனுஸ்மிருதி சொல்வதுதான் சனாதனமா? ஆமாம், அந்த மனுஸ்மிருதி சொல்வதை சனாதனமாக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்கிறேன். அப்படியான ஆட்கள்தான் நீங்கள். அதில் என்றும் சந்தேகம் இல்லை. பெண்ணை அடிமைப்படுத்துகிற, உழைக்கும் மக்களாகிய மக்களை சூத்திரன் என்று கேவலப்படுத்துகிற தன்மையைக் கொண்டதுதான் சனாதனம் என்பது அவர்களுடைய எழுத்தில் இருக்கிறது. அவர்களுடைய நூலில் இருக்கிறது. பதிவாகி இருக்கிறது. அது இல்லாமல் இன்றைய நடைமுறையில் அதைச் செய்கிறார்கள். அவர்களுடைய சட்டமாக இருக்கட்டும், அவர்களுடைய மொழிக் கொள்கையாக இருக்கட்டும், அவர்களுடைய பொருளாதாரக் கொள்கையாக இருக்கட்டும். இவை எல்லாமே இந்த சனாதனப் பின்புலத்தில் வந்த தன்மைகளைத்தான் அவர்கள் முதன்மைப்படுத்துகிறார்கள். கார்ப்பரேட் பணக்காரர்களின் தூதுவர்களாக, ஆதரவாளர்களாக அவர்கள் இருக்கிறபோது, ஏழை மக்களை பற்றியும், ஏழை மக்களின் நலன் பற்றியும் பேசும் சனாதன எதிர்ப்பாளர்களை அவர்கள் எப்படி ஜீரணிக்க முடியும்?

**உதயநிதி சொன்ன சொல் மிகவும் சரி. ஏனென்றால் சனாதனம் என்பது ஒரு பெரிய நோய். அந்த நோய் சாதியைப் பேசுவது, அந்த நோய் வர்ணாசிரமத்தைப் பேசுவது, அந்த நோய் பெண்களை இழிவுபடுத்துவது, அந்த நோய் மனித விரோதம், மனித அன்புக்கு எதிரானது, மனிதனுடைய வளர்ச்சிக்கு எதிரானது, மனிதனை மதிப்பதில்லை. அப்படி இருக்கும் அந்த நோயை அழிக்காமல் வேறு என்ன செய்வது? அதை பெரியார் அழித்தார், அம்பேத்கர் அழித்தார், வள்ளலார் அழித்தார். அந்த மரபில் வரும் திராவிட இயக்கம், முழுமையாக இன்றைக்கு அழிக்க வேண்டும் என்று விரும்புகிறது. அதன் ஒரு அடையாளமாக உதயநிதி அவர்கள், அதை ஒரு காலராவைப்போல, ஒரு பெரும் தொற்றைப்போல, ஒரு கொடிய நோயைப்போல இருக்கும் அதை அழிப்பதுதான் சரியான வழி என்று அவர் சொன்னது மிகச் சரியானது என்றே நான் கருதுகிறேன்.**

இவ்வாறு பேராசிரியர் வீ.அரசு ‘சன் செய்திகள்’ தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (05.09.2023) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண்மை இயந்திர மயமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் மற்றும் பவர் வீடர் கருவிகளை வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், நெடுவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (05.09.2023) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) திருமதி.ராஜேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.